# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1639/11 - 2010 පෙබරවාරි 02 වැනි අඟහරුවාදා - 2010.02.02

*1639/11 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்*

*கட்டளை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 9அ ஆம் பிரிவின் (ஈ) பந்தியின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் மே மாதம் 12 ஆந் திகதிய 453/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைத்துருவாக்கப்பட்ட கடுவெல பிரதேச சபையை, கடுவெல மாநகர சபையாக அமைத்துருவாக்குவதற்காக 2011, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கலைக்கின்றேன்.*

*ஜனக பண்டார தென்னக்கோன்,*
*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2010, சனவரி 20.*

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

*கட்டளை*

*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இக்கட்டளையின் மூலம் -*

(1) இதற்கானஅட்டவணை I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பை அக்கட்டளைச் சட்டத்தின் நோக்ககத்திற்கென மாநகர சபை பிரதேசமொன்றாக வெளிப்படுத்துகின்றேன் ;

(2) குறித்த மாநகர சபை பிரதேசத்தின் எல்லைகள் அட்டவணையின் II ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளாகவிருத்தல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன் ;

(3) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாநகர சபைக்கு பின்வரும் பெயரையும், பதவிப்பெயரையும் குறித்தொதுக்குகின்றேன் ;

**"கடுவெல மாநகர சபை"**

(4) கடுவெல மாநகர சபையானது, மாநகர முதல்வரையும், பிரதி மாநகர முதல்வரையும் வேறு 26 உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்று விதித்துரைக்கின்றேன் ;

(5) கடுவெல மாநகர சபையின் பதவிக்காலம் ஆரம்பமாகவேண்டிய திகதியை 2011, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியாக நிர்ணயிக்கின்றேன்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2010, சனவரி 20.

**அட்டவணை**

பகுதி I

**கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :**

(469) ரணால, (470) நவகமுவ, (470ஏ) நவகமுவ தெற்கு, (471) இஹள போமறிய, (471ஏ) வெகெவத்த, (472ஏ) பஹள போமிறிய ஏ (472பி) பஹள போமிறி பி, (473) கொத்தலாவல, (473ஏ) கடுவெல, (474) ஹேவாகம, (474ஏ) றக்கஹவத்த, (475) வெலிவிற்ற, (475ஏ) மஹதெனிய, (476) மாலபே கிழக்கு (476ஏ) மாலபே மேற்கு, (476பி) மாலபே வடக்கு, (477) தளங்கம வடக்கு ஏ (477ஏ) தளங்கம வடக்கு பி (477பி) முத்தெட்டுகொட, (477சி) பொத்துஅராவ, (478) தலாஹேன, (478ஏ) தலாஹேன தெற்கு, (479) ஜயவடனகம, (479ஏ) பஹலவெவ (479பி) ஆசிறி உயன, (479சி) விக்கிரமசிங்கபுர, (479டீ) குமாரகெவத்த, (479ஈ) பட்டபொத்த, (479 எவ்) அறுப்பிட்டிய, (480) வலிபில்லாவ, (480ஏ) அடிகமுவ, (480பி) எம்பல்லதெனிய, (480சி) பட்டேவெல, (487) ஒறுவல, (487ஏ) சாந்தாலோக்ககம, (488) கொறத்தொட்ட, (488ஏ) வெலிகிந்த, (488பி) துன் அந்தஹேன, (489) போறே, (489ஏ) பொறளுகொட, (490) அத்துறுகிரிய, (490ஏ) அத்துறுகிரிய தெற்கு, (490பி) தல்தியாவல, (491) கலபலுவாவ, (491ஏ) வல்பொல, (491பி) கொட்டுவேகொட, (492) ஸ்ரீ சுகுதிபுர, (492ஏ) பத்தரமுல்ல தெற்கு, (492பி) பத்தரமுல்ல வடக்கு, (492சி) உடகமுல்ல (உடுமுல்ல), (492டி) றஜமல்வத்த (494) ஹோக்கந்தற வடக்கு, (494ஏ) கோக்கந்தற கிழக்கு, (494பி) அறங்கல, (494சீ) ஹோக்கந்தற தெற்கு, (495) வெல்லன்கிறிய, (495ஏ) ஏவறிஹேன.

பகுதி II

**கடுவெல மாநகர சபையின் நிர்வாக எல்லைகள்**

வடக்கு :

கடுவெல, பிரதேச செயலாளர் பிரிவினதும், கொலன்னாவ பிரதேச செயலாளர் பொது எல்லை களனி கங்கையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் ஆரம்ப புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கி கடுவெல பிரதேச செயலாளர் பிரிவினதும், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவினதும் பொது எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரை வரையப்பட்ட கோட்டின் மூலமும் ;

கிழக்கு :

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஹோமாகம மற்றும் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக தெற்கு நோக்கி குறித்த பொது எல்லை, ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின் (486) ஹோமாகம வடக்கு மற்றும் (481பி) ஹபரகடவத்த கிராம அலுவலர் பிரிவுகளின் பொது எல்லையைச் சந்திக்கும் புள்ளிவரை வரையப்பட்ட கோட்டின் மூலமும் ;

தெற்கு :

மேலே இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஹோமாகம மற்றும் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக மேற்கு நோக்கி குறித்த எல்லை மஹரகம பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து கடுவெல, மஹரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக மேற்கு நோக்கி குறித்த எல்லை ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரை வரையப்பட்ட கோட்டின் மூலமும் ;

மேற்கு :

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மற்றும் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையூடாக வடமேற்கு நோக்கி குறித்த எல்லை கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் அங்கிருந்து கொலன்னாவ மற்றும் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையூடாக கிழக்கு நோக்கி, வடமேற்கு நோக்கி மற்றும் வடக்கு நோக்கி குறித்த எல்லையானது ஆரம்ப புள்ளி வரையும் வரையப்பட்ட கோட்டின் மூலமும் எல்லைப்படுத்தப்படும்.

2-353

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.